ந.க.எச்2/5550/2020
நாள்: 25.06.2020

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விழுப்புரம்.

## பத்திரிக்கை செய்தி

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் 1429-ம் பசலிக்குரிய வருவாய் தீர்வாயம் 26.06.2020 முதல் நடைபெற உள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்து வட்டங்களுக்கும் வருவாய் தீர்வாய அலுவலர்கள் கீழ்கண்டவாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சியர் அவர்கள் விழுப்புரம் வட்டத்திலும், கூடுதல் ஆட்சியர்(வருவாய்) அவர்கள் விக்கிரவாண்டி வட்டத்திலும் வருவாய் தீர்வாயம் நடத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

| வ. எண். | வருவாய் வட்டத்தின் பெயர் | வருவாய் தீர்வாய அலுவலராக நியமனம் செய்யப்படும் அலுவலர் |
|---|---|---|
| 1 | விழுப்புரம் | மாவட்ட ஆட்சியர், விழுப்புரம். |
| 2 | விக்கிரவாண்டி | கூடுதல் ஆட்சியர் (வருவாய்), விழுப்புரம். |
| 3 | வானூர் | வருவாய் கோட்டாட்சியர், விழுப்பரம். |
| 4 | திண்டிவனம் | உதவி ஆணையர் (கலால்), விழுப்புரம். |
| 5 | செஞ்சி | தனித்துணை ஆட்சியர் (ஆர்பிட்ரேஷன்), விழுப்புரம். |
| 6 | மேல்மலையனூர் | மாவட்ட மேலாளர் (தாட்கோ), விழுப்புரம். |
| 7 | மரக்காணம் | சார் ஆட்சியர், திண்டிவனம். |
| 8 | கண்டாச்சிபுரம் | தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி), விழுப்பரம. |
| 9 | திருவெண்ணெய்நல்லூர் | மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், விழுப்புரம். |

தமிழகத்தில் கொரோனா தொற்று (COVID-19) காரணமாக ஊரடங்கு சட்டம் அமலில் உள்ளதால் பொதுமக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை 29.06.2020 முதல் 15.07.2020 வரை இணையதளம் மற்றும் இ-சேவை மையங்கள் மூலமாக மட்டும் அனுப்பப்படவேண்டும். கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையை முன்னிட்டு நேரடியாக மனுக்கள் பெறப்படாது. மேலும், பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை அளிக்க வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நேரில் வரவேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். வருவாய் தீர்வாயம் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் அருகாமையிலுள்ள இ-சேவை மையங்கள் மூலம் தங்கள் மனுக்களை கீழ்க்கண்ட இணையதள முகவரி மூலம் அளித்து பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பொதுமக்கள்மனுக்கள் அனுப்பவேண்டிய இணையதள முகவரி:-**

**https://gdp.tn.gov.in/jamabandhi**

மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம்.